
## மருத்துவ சேவை வழங்குவதிலும் – மக்களின்

# உடல்நலனைக் காப்பதிலும் தமிழ்நாடுதான் ‘நெம்பர் 1’

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!




சென்னை, ஆக.24-

“நலம் காக்கும் ஸ்டாலின்” முகாம்கள் குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2.8.2025 அன்று சென்னை, சாந்தோம், செயின்ட் பீட்ஸ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில், தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் “நலம் காக்கும் ஸ்டாலின்” சிறப்பு மருத்துவ முகாமினை தொடங்கி வைத்தார்.

இம்முகாமில் பங்குகொள்ளும் பயனாளர்களுக்கு பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை மருத்துவம், இருதய மருத்துவம், எலும்பியல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், காது, மூக்கு மற்றும் தொண்டை மருத்துவம், மகப்பேறு மருத்துவம், இயன்முறை மருத்துவம், பல் மருத்துவம், கண் மருத்துவம், மன நல மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், நுரையீரல் மருத்துவம் ஆகிய மருத்துவச் சேவைகள் மற்றும் இந்திய மருத்துவம் சார்ந்த ஆலோசனைகள் சிறப்பு மருத்துவ நிபுணர்களை கொண்டு வழங்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட பரிசோதனைகள் மட்டுமின்றி, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் கீழ் பதிவுசெய்தல் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான அரசு அங்கீகார சான்றிதழ் வழங்கப்படுகிறது.

இது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில்,

**ஆகஸ்ட் 2 தொடங்கி, சனிக்கிழமைதோறும் நடைபெற்று வரும் நலம் காக்கும் ஸ்டாலின் முகாம்களில் இதுவரை 3 வாரங்கள் நிறைவுற்றுள்ளன.**

**முதல் வாரம் ( ஆகஸ்ட் 2) 44,795 மருத்துவப் பயனாளிகள்**

**இரண்டாம் வாரம் (ஆகஸ்ட் 9) 48,046 மருத்துவப் பயனாளிகள்,**

**மூன்றாம் வாரம் (ஆகஸ்ட் 23) 56,245 மருத்துவப் பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.**

**மருத்துவ சேவை வழங்குவதிலும் மக்களின் உடல்நலனைக் காப்பதிலும் தமிழ்நாடுதான் ‘நம்பர் 1’ என உறுதிசெய்வோம்!**

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, நேற்று (23.08.3025) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சோழிங்கநல்லூர் மண்டலத்தில் தூய்மைப் பணியாளராக பணியாற்றி வந்த திருமதி வரலட்சுமி, பணிக்குச் செல்லும் வழியில் மின்சாரம் தாக்கி உயிரிழந்ததை முன்னிட்டு, அவரது குடும்பத்தினருக்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில் ரூபாய் 10 இலட்சமும், தூய்மைப் பணியை மேற்கொள்ளும் உர்பேசர் சுமீத் நிறுவனத்தின் சார்பில் ரூபாய் 10 இலட்சமும் என மொத்தம் ரூபாய் 20 இலட்சம் நிவாரண உதவித்தொகைக்கான காசோலையினை அவரது குடும்பத்தினரிடம் வழங்கினார். அருகில் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், மண்டலக்குழுத் தலைவர் வி.இ.மதியழகன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.





தாம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, தாம்பரம் மாநகராட்சி, கிறிஸ்ட் கிங் பள்ளியில் நடைபெற்ற ”நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாமை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைத்தார். அருகில் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ். ஆர்.ராஜா, மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், மண்டலக்குழு தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், பகுதிச் செயலாளர் த. ஜெயக்குமார், மற்றும் பகுதி கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 185 வது நாள்!

### எழும்பூர் தெற்குப் பகுதியில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

*சென்னை, ஆக. 24-*

*சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுதகரங்கள் திட்டத்தின் 185 வது நாள் எழும்பூர் தெற்கு பகுதி இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி உணவு வழங்கப்பட்டது.*





*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 185 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (23.08.2025), எழும்பூர் தெற்கு பகுதி: 1) வட்டம் 108, வைத்தியநாதன் தெரு, விநாயகர் கோயில் அருகில். 2) வட்டம் 108அ , அம்பேத்கர் திடல், சேத்துப்பட்டு, சென்னை ஆகிய பகுதிகளில் அமைச்சர் .பி.கே. சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.*

*இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், வி.சுதாகர், சொ. வேலு, கோ.ஏகப்பன், கே. எஸ்.ரவிச்சந்திரன், தமிழன்பிரசன்னா, புனிதவதி எத்திராசன், கே.எஸ்.எம்.நாதன், கோ.மணி, ஜி.தாமோதரன், பி.எம்.யாழினி, ராஜேஸ்வரி ஸ்ரீதர், பரிதி இளம்சுருதி, எழும்பூர் தெற்கு/வடக்கு வட்ட கழக செயலாளர்கள்: வி.விஜய குமார், ஆர்.பாபு, டால்பின் எஸ்.அரிகிருஷ்ணன், இ.மொய்தீன், வான்மதி கதிரவன், எல்.சுந்தர்ராஜன், தி.தயாளன், வி.அபாய், சு.மனோகர், ந.பாலு, ஆர். எம்.ரங்க நாதன், சி.சேகர், ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், K.R. அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம. அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா. பிரதீப்கு மார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.*

## தமது வாழ்வை

# பாட்டாளிகள், உழவர்கள், ஒடுக்கப்பட்டோரின் போராட்டங்களுக்காகவே அர்ப்பணித்தவர்!

### இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் சுதாகர் ரெட்டி மறைவுக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, ஆக.24-**



**இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் தோழர் சுதாகர் ரெட்டி அவர்களின் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் “தமது வாழ்வை பாட்டாளிகள், உழவர்கள் மற்றும் ஒடுக்கப்பட்டோரின் போராட்டங்களுக்காகவே அர்ப்பணித்தவர்!” என்று புகழாரம் சூட்டியுள்ளார்.**

முதல்வர் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் தோழர் சுரவரம் சுதாகர் ரெட்டி அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வேதனையடைந்தேன்.

தொடக்கக் காலத்தில் மாணவத் தலைவராக இருந்து, நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றி, பின்னாளில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய தலைவராக உயர்ந்தது வரை சுதாகர் ரெட்டி அவர்கள் தனது வாழ்வைப் பாட்டாளிகள், உழவர்கள் மற்றும் ஒடுக்கப்பட்டோரின் போராட்டங்களுக்காகவே அர்ப்பணித்தார்.

கூட்டணிப் பேச்சுவார்த்தைகள், தலைவர் கலைஞர் நினைவேந்தல் என அவர் தமிழ்நாடு வந்தபோதெல்லாம் அவரது அன்பையும் தெளிவான பார்வையையும் அருகில் இருந்து கண்டுணர்ந்திருக்கிறேன்.

நீதி மற்றும் மாண்புக்கான போராட்டத்துக்கு அவரது வாழ்வு தொடர்ந்து ஊக்கமளிக்கும். அவரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் பொதுவுடைமை இயக்கத் தோழர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்தச் செய்தியில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## ‘முதல்வரின் காலை உணவு’த் திட்டம்! மாணவர்கள் மட்டுமின்றி

# தாய்மார்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்ற முன்னோடித் திட்டம்!

### ‘‘தினகரன்’’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஆக.23–

முதலமைச்சர் காலை உணவுத் திட்டம் மாண வர்கள் மட்டுமின்றி, தாய்மார்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்று மற்ற திட்டங்களை விட இது முன்னோடி திட்ட மாக போற்றப்படுகிறது என ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

அது வருமாறு:–

இந்தியாவிலேயே முதன்முறையாக, அரசு பள்ளி மாணவர்களுக்காக முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த 2022 செப்டம்பர் 15 அன்று மதுரையில் தொடங்கி வைத்தார். இத்திட்டத்திற்கு கிடைத்த வரவேற்பை தொடர்ந்து, படிப்படியாக விரிவாக்கம் செய்யப்பட்டு வருகிறது. முதல்கட்டமாக, 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் அரசு பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

தற்போது, இந்த திட்டம் நகர பகுதிகளில் உள்ள அனைத்து அரசு உதவிபெறும் தொடக்க பள்ளிகளில் படிக்கும் 1 முதல் 5ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கும் விரிவுபடுத்த‘ப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ரூ.404 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தை வரும் செப்டம்பர் 26ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். இதன் மூலம், சுமார் 3.05 லட்சம் மாணவர்கள் பயனடைவார்கள். நகர பகுதிகளிலும், கிராம பகுதிகளிலும் பள்ளிக்கு செல்லக் கூடிய குழந்தைகள் காலையிலேயே புறப்பட்டு விடுவதால், பெரும்பாலான குழந்தைகள் காலை உணவு சாப்பிடுவது இல்லை.

பள்ளிகள் மிக தூரமாக இருப்பது மட்டுமின்றி, சிலருடைய குடும்ப சூழலும் இதற்கு முக்கிய காரணமாக இருக்கிறது. இதனை மனதில் கொண்டு காலை சிற்றுண்டி திட்டத்தை தமிழக முதல்வர், நடைமுறைப்படுத்தி வருகிறார்.

தமிழ்நாட்டில் மதிய உணவு திட்டத்திற்கு என்று ஒரு நீண்ட வரலாறு உண்டு. 1920ம் ஆண்டு முதன்முதலில் சென்னை ஆயிரம்விளக்கு பகுதியில் உள்ள மாநகராட்சி பள்ளியில் மாணவர்களுக்கு சிற்றுண்டி வழங்க, சென்னை மாநகராட்சி தலைவராக இருந்த நீதி கட்சி தலைவர் சர்.பிட்டி. தியாகராயர் உத்தரவிட்டார்.

அதன்பிறகு, 1956ல் காமராஜர் மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தினார். 1982ல் எம்.ஜி.ஆர். மாநிலம் முழுவதும் அங்கன்வாடிகள், கிராமப்புற பகுதிகளில் உள்ள ஆரம்ப பள்ளி களில் படிக்கும் குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கும் திட்டத்தை உருவாக்கினார். 1989ம் ஆண்டு கலைஞர் முதலமைச்சராக இருந்த போது 15 நாட்களுக்கு ஒரு முறை, மதிய உணவோடு அவித்த முட்டை வழங்கும் திட்டத்தை கொண்டு வந்தார். இது, 1998ல் வாரம் ஒரு முறை முட்டையாகவும் 2010ம் ஆண்டு முதல் எல்லா நாட்களிலும் முட்டை வழங்கும் திட்டமாகவும் மாற்றப்பட்டது. ஆரம்ப பள்ளிகளில் அனைத்து குழந்தை களுக்கும் இலவச மதிய உணவு வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்திய முதல் மாநிலம் தமிழ்நாடு.

இவை எல்லாவற்றையும் தாண்டி, ஆரம்ப பள்ளியில் பயிலும் அனைத்து குழந்தைகளுக்கும் காலை உணவு திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் துணிச்சலுடன் கொண்டு வந்துள்ளார்.

இந்த திட்டத்தின் மூலம் வேலைக்கு செல்லும் பெண்களின் பணிச்சுமை மற்றும் செலவு குறைக்கப்பட்டுள்ளது. குழந்தைகளின் காலை உணவை பற்றி கவலைப்பட வேண்டியதில்லை என்பதால், பெண்களால் தங்கள் வேலைகளில் கவனம் செலுத்த முடிகிறது. குழந்தைகளிடமிருக்கும் ஊட்டச்சத்து குறைபாடு நீங்குகிறது. குழந்தைகள், பாடங்களை கவனிப்பது அதிகரிக்கிறது. இது, அவர்களது எதிர்கால கல்விக்கு வெகுவாக பயனளிக்கிறது. அதனால்தான் இந்த திட்டம், மாணவர்கள் மட்டுமின்றி, தாய்மார்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. மற்ற திட்டங்களைவிட, இது முன்னோடி திட்டமாக போற்றப்படுகிறது.

நீதிக்கட்சி காலத்திலிருந்து இன்றைக்கு வரை மதிய உணவு திட்டம் எப்படியெல்லாம் விரி வடைந்து, சத்துணவு திட்டமாகி, காலை உணவு திட்டம் அளவுக்கு வளர்ந்துள்ளது என்பதை கண்கூடாக பார்க்க முடிகிறது. இது, நூற்றாண்டு வரலாற்றை உணர்வுப்பூர்வமாக மனதில் நிலை நிறுத்துகிறது.


தினகரன்
ஆகஸ்ட் 23, 2025 சனிக்கிழமை
முன்னோடி திட்டம்
இந்தியாவிலேயே முதன்முறையாக, அரசு பள்ளி மாணவர்களுக்காக முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த 2022 செப்டம்பர் 15 அன்று மதுரையில் தொடங்கி வைத்தார். இத்திட்டத்திற்கு கிடைத்த வரவேற்பை தொடர்ந்து, படிப்படியாக விரிவாக்கம் செய்யப்பட்டு வருகிறது. முதல்கட்டமாக, 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் அரசு பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.
தற்போது, இந்த திட்டம் நகர பகுதிகளில் உள்ள அனைத்து அரசு உதவிபெறும் தொடக்க பள்ளிக

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.




சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக நெற்குன்றம் ஊராட்சியில் மாவட்டக் கழக செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான மாதவரம் எஸ்.சுதர்சனம் நெற்குன்றம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் 2 புதிய வகுப்பறைகளை குத்து விளக்கேற்றி திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் பள்ளி தலைமையாசிரியர் ரவி, சோழவரம் தெற்கு ஒன்றியச் செயலாளர் மீ.வே.கர்ணாகரன், ஒன்றிய நிர்வாகிகள் சீனிவாசன், கே.வீரம்மாள், செ.அரசு, இரா. விஜயன், ப.சேகர், நா.பரசுராமன், ஜி.பூபாலன், சந்திரசேகரன், மாயகிருஷ்ணன், அ.பாலாஜி, உதயகுமார், க.பிரபு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.





அம்பத்தூர் தொகுதி, 88 வது வார்டு, அன்னை கல்யாண மண்டபத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் நடைபெற்றது. இதில் மொத்தம் 2293 பயனாளர்கள் பங்குபெற்றனர். முகாமில், ஆதரவற்ற மாற்றுத்திறனாளி பெண்ணையும், அவர்களின் குழந்தையையும் பெருநகர சென்னை மாநகராட்சியின் இரவு தங்கும் விடுதிக்கு உடனடியாக அனுப்ப மாமன்ற உறுப்பினர் ஜி.வி.நாகவள்ளி பிரபாகரன் ஏற்பாடு செய்தார். இந்நிகழ்வில் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், அம்பத்தூர் 7 வது மண்டலக் குழுத் தலைவர் பி.கே.மூர்த்தி, அம்பத்தூர் தெற்கு பகுதிச் செயலாளர் டி.எஸ்.பி.ராஜகோபால் மற்றும் அரசு அதிகாரிகள், பெருநகர மாநகராட்சியின் மண்டல அலுவலர், அதிகாரிகள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.